www.tamilarangam.net

# "ஜனநாயகத்தை முன்நிபந்தனையாக வைத்து இனவெறி பாசிச ஐ. தே. கட்சி அரசை தூக்கியெறிவீர்."

"இனங்களுக்கிடையே சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்தி தார்மீக சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்புவோம் வாரீர்"

இது ஐக்கிய தேசியக்கட்சி அரசு 1977 ல் ஆட்சிக்கு வந்தவுடன் மக்களுக்கு விடுத்த அறைகூவல் இந்த - அறைகூவல் விடப்பட்டு இன்றைக்கு 11 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று வரை இலங்கை மக்களாகிய நாம் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் - சமத்துவத்தையும் யதார்த்த நடைமுறையிலல்ல - காகித எழுத்துக்களில் மட்டுந்தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்று வரை முடிவின்றி நடந்து கொண்டிருக்கும் உள் நாட்டு யுத்தம் சமாதானத்தை எட்டா நெடுந்தொலைவுக்கு அனுப்பி விட்டது மட்டுமல்ல. ஒரு அந்நிய நாட்டுப்படை கூட நம் நாட்டுக்குள் வந்து ஆதிக்கம் செலுத்துமளவுக்கு நிலைமையை மோசமாக்கி விட்டது.

நமது பிரச்சனைகளை நாமே பேசித் தீர்க்கும் நிலை மாறி - முடிவெடுக்கும் நிலைமாறி - அந்நிய நாட்டுத் தலைமைகளிடம் பேச வேண்டிய நிலைக்கும் அவர்களுடைய முடிவுகளுக்கு கட்டுப்பட வேண்டிய நிலைக்கும் எமது நாட்டின் அரசியல் அதிகாரம் விலை போய் விட்டது.

ஏன் இந்த இழிநிலை? யார் இவற்றிற்கெல்லாம் காரணம்? தமிழ்ப் போராளிகளா? இல்லை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசா?

தமிழ் மக்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காக 25 வருடங்களுக்கு மேலாக அரசியல் ரீதியில் நடத்திய பல்வேறு போராட்டங்கள் அடைந்த தோல்வியே - வடக்கு கிழக்கு இளைஞர்களை ஆயுத மேந்தும் நிலைக்குத் தள்ளியது.

தமிழ் இளைஞர்களது இந்தப் போராட்டத்தை யதார்த்த நிலைமைகளில் வைத்து நோக்கத் தவறிய இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு - அதற்கு வட பகுதிப் பயங்கரவாதம் என்று முத்திரை குத்தி, அவசரகாலச் சட்டம் - பயங்கரவாதத் தடைச் சட்டம். தேசியப் பாதுகாப்புச் சட்டம் - முதலான கொடிய பாசிச அடக்கு முறைச் சட்டங்களைப் பிறப்பித்து தமிழ் மக்களது குறைந்த பட்ச அடிப்படை உரிமைகளைக் கூட நசுக்கியது. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களையும் இளைஞர்களையும் - பயங்கரவாதிகள் என்ற பெயரில் கைது செய்து சிறைக் கூடங்களிலும் - இராணுவ வதை முகாம்களிலும் விசாரணையின்றி நெடுங் காலம் அடைத்து வைத்தது.

தனது சொந்த நாட்டுக்குள்ளேயே யுத்தப் பிரகடனம் செய்து - முப்படைத்தாக்குதல்களை நடத்தி பல்லாயிரக் கனக்கான - அப்பாவி மக்களின் உயிருக்கும் உடமைக்கும் நாசம் விளைவித்தது. இலட்சக் கணக் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களிலேயே அகதிகளாக்கி துரத்தியடித்தது.

நாட்டின் பொருளாதாரத்தையே யுத்தப் பொருளாதாரமாக்கி - கோடிக்கணக்கான ரூபா செலவிட்டு ஆயுதங்களையும் யுத்ததளபாடங்களையும் வாங்கியதோடு - அந்நியக் கூலிப்படைகளையும் வரவழைத்து தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக முழு மூச்சான யுத்தம் நடத்தியது.

தென் பகுதியில் பௌத்த சிங்கள தேசிய வாதத்தைத் தூண்டி தமிழ் மக்களது நியாயமான போராட்டத்தை - சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமெனத் திரித்துக் கூறி அதை முறியடிக்க தமது அரசை சிங்கள மக்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்தது.

இவ்வாறெல்லாம் பாசிச - யு. என். பி. அரசு தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்ட போதும் - பாசிச அடக்கு முறைச் சட்டங்களை பிரயோகித்த போதும் பெரும்பாலான சிங்கள மக்களும் - சிங்கள முற்போக்கு சக்திகளும் அவற்றை எதிர்த்துக் குரல் கொடுப்பதற்கு பதில் துர்ரதிஷ்ட வசமாக - இனவாதச் சேற்றுக்குள் மூழ்கி "வட பகுதிப் பயங்கரவாத அபாயம்" என்னும் ஆளுங்கட்சியின் கோசத்தையே ஆதரித்தார்கள்.

மறுபுறத்தில் எப்போதும் இலங்கையில் தமது மேலாதிக்கத்தை நிலை நிறுத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த பிராந்திய மேலாதிக்கச் சக்திகள் தமிழ் போராளிகள் மத்தியிலிருந்து தவறான சக்திகளை வளர்த்து விட்டு அவர்கள் மூலமாக -

ஐ. தே கட்சியினுடைய - தவறான அணுகுமுறையை பயன்படுத்தி தமது நோக்கத்தை இன்று நிறைவேற்றிக் கொண்டு விட்டார்கள்.

இன்றைக்கு தென்பகுதியிலே கூட சிங்கள இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் சூழ்நிலை உருவாகி வளர்ந்திருக்கிறது. அதையும் - இந்த அரசு "தென் பகுதிப் பயங்கரவாதம்" என முத்திரை குத்தியிருக்கிறது. தமிழ் மக்கள் மேல் ஏவப்பட்ட அதே பாசிச அடக்கு முறைச் சட்டங்களும் - அதே அரச பயங்கரவாதமும் இன்று சிங்கள மக்கள் மீதே திருப்பி விடப்பட்டிருக்கிறது.

நாம் ஒன்றை நன்றாகச் சிந்தித்துப் - பார்க்க வேண்டும் - வடக்கு கிழக்கு பகுதி தமிழ் இளைஞர்களும் ஆயுத மேந்துகின்றார்கள். தென் பகுதி சிங்கள இளைஞர்களும் ஆயுதமேந்துகின்றார்கள். இருவரும் ஒருவரை எதிர்த்து ஒருவர் (ஒருசில விதி விலக்குகள் தவிர) ஆயுதமேந்துகின்றார்களா என்றால்.. இல்லை. என்ற பதில்தான் வரும் இரு சாராருமே இந்த - அரசுக்கு எதிராகவும் அரச இயந்திரத்திற்கு எதிராகவுமே - ஆயுதமேந்துகின்றார்கள் ஏன் ஏந்துகின்றார்கள் என்றால். சுட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் என்று நிச்சயமாகப் பதில் சொல்ல முடியாது. அப்படியென்றால் ஏதோ பிரச்சனை - இருக்கிறது. பிரச்சனை இல்லாமல் போராட்ட தோன்றியிருக்க முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் பிரச்சனை என்பதே - இளைஞர்களி டமல்ல ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசிடமும் (அதன் அணுகு முறையிலும்) இந்த முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பு முறையிலும்- தான் இருக்கிறது. இது தான் அடிப்படை.

தனிநபர் பயங்கரவாதம் நாட்டிலே இருக்கிறது மறுப்பதற்கில்லை. அதைவிட நாட்டையே நாசமாக்கக் கூடிய அளவிற்கு - மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கக் கூடிய அளவுக்கு மக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் உத்தரவாதமில்லாத அளவுக்கு அரச - பயங்கரவாதம் - மிகப் பெரிய அபாயமாக வளர்ந்திருக்கிறது.

இன்றைக்கு இந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலே சிங்கள மக்களாக இருந்தாலும் சரி தமிழ் - முஸ்லீம் மலையக மக்களாகளாக இருந்தாலும் சரி - எவரும் எப்போது வேண்டுமானாலும் பயங்கரவாதி என்ற - பெயரில் கைது செய்யப் படலாம், எவ்வளவு காலம் வேண்டுமானாலும் விசாரணையின்றி சிறையிலோ இராணுவ முகாமிலோ அடைக்கப்படலாம் - ஆளும் வர்க்கத்தின் விருப்பத்தைப் பொறுத்து சுட்டுக் கொல்லப்பட்டு அநாதையாக எரிக்கப்படலாம்.

அரசியலமைப்புச் சட்டத்தால் வகுத்தளிக்கப் பட்ட அடிப்படை உரிமைகளான பேச்சுரிமை - எழுத்துரிமை - கூட்டங்கூடும் உரிமை, என்பன கூட அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த அரசால் மட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் பறிக்கப் படுமளவிற்கு வரையறுக்கப்பட்டிருக்கிறது.

தொழிற்சங்க உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டிருக்கின்றன. 1980 - ஏப்ரலில் - தமது அடிப்படை உரிமைக்காக வேலை நிறுத்தம் செய்த அரச ஊழியர்கள் சுமார் 20000 பேர் இந்த அரசால் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். இந்த தார்மீக ஆட்சியிலே தொழிலாளர்களோ - ஊழியர்களோ, தங்களது - தொழிற்சங்க உரிமைகளை வலியுறுத்தி ஒரு ஆர்ப்பாட்டமோ ஊர்வலமோ நடத்த முடியாத நிலை.

மேலும் இந்த அரசு - தனது தரகு முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களுக்கு திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற அடிப்படையில் சுரண்டலுக்கு கதவு திறந்து விட்டதன் விளைவாக நாட்டின் தேசியப் பொருளாதாரமும் - தேசிய உற்பத்தியும் நசுக்கப்பட்டு - அழிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டன. உண்ணும் உணவு - குடிக்கும் குளிர்பானங்கள் வரை - அனைத்து அத்தியாவசிய மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கான - ஏகாதிபத்தியங்களின் விற்பனைச் சந்தையாக இலங்கையை மாற்றியதோடு இங்குள்ள மூலவளங்களையும் மனித உழைப்பையும் கூட மிகக் குறைந்த செலவில் ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடித்துச் செல்ல இந்த அரசாங்கம் வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது.

இதனால் முன்பு தம்முடைய சொந்த நிலத்தில் சொந்த உழைப்பில் தங்கியிருந்த அப்புஹாமிகளும் கணபதிப்பிள்ளைகளும் காரியப்பர்களும் இன்று பிழைப்புத் தேடி கொழும்பு நகரவீதிகளில் வெளிநாட்டு ஏஜன்சிகளுக்கும் முதலாளித்துவக் கம்பனிகளுக்கும் அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இன்று இலங்கையிலே 140000 இந்திய இராணுவம் இருக்கிறது. ஆனால் இந்த நாட்டின் ஆட்சித் தலைவர் J R ஜெயவர்த்தனாவுக்கு தெரிந்த கணக்கு 70.000 இந்திய அரசு சொல்வது அப்படித்தான். இந்திய இராணுவம் தான் நினைத்த போது வருகிறது. நினைத்தபடி செல்கிறது. தான் விரும்பியவர்களை அழைத்து வருகிறது இதெல்லாம் இலங்கை அரசுக்கு தெரியுமா என்றால் இல்லை. அப்பட்டமாகச் சொன்னால் இலங்கையின் இறைமையை இந்தியா மீறுகிறது. இந்திய இராணுவம் இந்த நாட்டுள்ளேயே வந்து - இந்த நாட்டுப் பிரசைகளை கொன்று குவிக்கிறது. கைது செய்கிறது. இந்தியாவில் கொண்டு சென்று சிறை வைக்கிறது. இந்திய உளவுப் படையான RAW தனக்குச் சாதகமான தமிழ் குழுக்களுக்கு பணமும் ஆயுதமும் கொடுத்து - சிங்கள - மற்றும் முஸ்லீம் மக்களைக் கொல்லவும் - நாடெங்கிலும் அழிவு நாசகார வேலைகளை மேற்கொள்ளவும் தூண்டி விடுகிறது. இதைத் தடுத்து நிறுத்தும் தட்டிக் கேட்கும் தகுதியை ஐ. தே. க. அரசு இழந்து விட்டது "குப்புற விழுந்தும் மீசையில் மண் முட்டவில்லை" என்ற கதையாக இந்தியாவின் உதவியுடன் நாடு பிளவு படுவதை தடுத்துவிட்டோம்" என்று இந்திய இராணுவத்தின் வருகையை நியாயப் படுத்த வேறு செய்கிறது.

இன்று வடக்கு கிழக்கு பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருக்கும் இந்திய இராணுவம் நாளை தென் பகுதியில் ஆயுத மேந்தியிருக்கும் சிங்கள இளைஞர்களைக் காரணங் காட்டி தென் பகுதியிலும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கும் அடக்கு முறையை பிரயோகிப்பதற்கு நீண்ட நாள் எடுக்காது, 1971ல் 10000க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களையும் யுவதிகளையும் இந்த இந்திய இராணுவம் கொன்று குவித்ததை அவ்வளவு இலகுவில் மறந்து விட முடியாது. உண்மையில் நாடு பிளவு படுவதை தடுப்பதாகச் சொல்லிக் கொண்டு முழுநாட்டையுமே இந்தியாவினது மேலாதிக்கத்திற்குட்பட்ட அடிமை நாடாக இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு மாற்றி விட்டது,

அடுத்து மலையக மக்களைப் பொறுத்த வரை இந்த ஐ. தே. கட்சி அரசுதான் பெரிய நன்மை செய்ததாக பெரிய பிரச்சாரம் செய்யப்படுகிறது. இந்த அரசுதான் மலையக மக்களைப் பாதுகாக்கின்றது என்று ஒரு படி மேலே சென்று கூட இந்தப் பிரச்சாரர்கள் வக்காலத்து வாங்குகின்றார்கள்.

இதே யு என். பி. அரசின் ஆட்சிக் காலத்தில் தான் முன்பு மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட தென்பதையும், தற்போதைய அரசின் ஆட்சிக்காலத்தில் வந்த இருபெரும் இனக்கலவரங்களில் தான் மலையக மக்கள் பெருமளவுக்கு பாதிக்கப் பட்டார்கள் என்பதையும் இவர்கள் மறந்து விடுகின்றார்கள் அல்லது மறைக்கின்றார்கள்.

இந்த அரசுக்கு தேவை மலைய மக்களின் வாக்குகள், இந்த வாக்கு வேட்டைக்காகத்தான் மலையக மக்களுக்கு இந்த அரசு சலுகை செய்கிறதே அன்றி அவர்கள் மீது கொண்ட உண்மையான அக்கறையினாலல்ல.

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்த மென்பதே மலையக மக்களை மனிதர்களாக மதிக்காமல் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைத்தவர்கள் உதிரம் சிந்தியவர்கள் என்பதை மனதில் கொள்ளாமல் ஏற்றி இறக்கும் சரக்குகளைப் போல அஃறிணைப் பொருட்களைப் போல எண்ணி செய்து கொள்ளப்பட்ட ஒரு துரோக ஒப்பந்தம் இந்த ஒப்பந்தத்தை நீக்கி அனைத்து மலையக மக்களுக்கும் குடியுரிமையும் வாக்குரிமையும் வழங்க இந்த அரசு தயாராக இல்லை. மலையக மக்கள் ஒரு மாபெரும் சக்தியாக பலம் பெறுவதை அது அனுமதிக்காது. இது தான் உண்மை. இன்றைக்கு மலையக மக்களுக்கு

www.tamilarangam.net

பு என். பி அரசு உரிமைகளை வழங்கிவிட்டதாகச் செல்பவர்கள் தமிழகத்திலே சொகுசு பங்களாக்களிலும் நான்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் மாலை விருந்து நடத்துகிற நேரத்திலே ஏழை குப்பனும் சுப்பனும் கல் குவாரிகளுக்கு கொத்தடிமைகளாக விற்கப்படுவதும் மூக்காயையும் செல்லாயியும் பணத்துக்கு விலை பேசப்படுவதும் மறைக்கப்படுவது ஏன் ?

உண்மையில் மலையக மக்களின் பாதுகாப்பென்பது உரிமை மீட்சி என்பது அவர்கள் தங்களுடைய போராட்டத்தை தங்கள் சொந்தக் கரங்களில் எடுப்பதிலும் நாடு முழுவதிலும் தங்கள் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் அனைத்து மக்களுடைய போராட்டங்களுடன் அதனை இணைப்பதிலும் அதன் மூலம் மக்கள் ஜனநாயகக் குடியரசு நிறுவும் பணிக்கு பங்களிப்பதிலும் தான் தங்கியுள்ளதே அல்லாமல் ஆட்சி பீடத்தில் உள்ளவர்களுக்கு வால்பிடித்து அவர்களது சலுகை பெறுவதிலல்ல என்பதை மலையக மக்கள் மனதில் கொள்ள வேண்டும்.

அடிப்படையில் இன்று மலையக மக்களாக இருந்தாலும் சரி முஸ்லிம் மக்களாக இருந்தாலும் சரி வடக்கு கிழக்கு தமிழர்கள் மற்றும் சிங்கள மக்கள் அனைவருக்குமே பிரச்சனையாக உள்ளது.....

பயங்கரவாதத் தடைச் சட்டம் தேசிய பாதுகாப்புச் சட்டம் அவசரகாலச் சட்டம் முதலான கொடிய அடக்கு முறைச் சட்டங்களால் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்து மக்களை நசுக்கி அரச பயங்கரவாதத்தின் துணை கொண்டு ஆட்சி நடத்தும் பாசிச ஐக்கிய தேசியக் கட்சி அரசே இது இலங்கை மக்களின் நலனுக்கான ஒரு அரசல்ல. ஏகாதிபத்தியங்களுக்கு சேவை செய்கின்ற தரகு முதலாளித்துவ அரசே.

இந்தப் பாசிச அரசு ஆட்சி பீடத்தில் இருக்கும் வரை இந்த நாட்டில் மிகக் குறைந்த பட்ச முதலாளித்துவ ஜனநாயகம் கூட கிடைப்பதற்கு வழியில்லை

முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்பு முறையென்பது படுபிற்போக்கானது தான். பெரும்பான்மையாக உள்ள மக்களை பணபலம் ஆதிக்கபலம் அதிகாரபலம் என்பவற்றை பயன்படுத்தி வாக்குரிமை என்ற கருவியால் விலைக்கு வாங்கி சிறுபான்மையாக உள்ள ஆளும் வர்க்கம் குறிப்பிட்ட காலத்திற்கு சுரண்டவும் அடக்கி ஒடுக்கி அதிகாரம் செய்யவும் பயன்படும் ஒரு சட்டபூர்மமான வடிவமே.

பெரும்பான்மை மக்களுக்கு சர்வாதிகாரத்தையும் சிறுபான்மை ஆளும் வர்க்கத்திற்கு ஜனநாயகத்தையும் வழங்கும் இந்த படு பிற்போக்குத்தனமான அமைப்பு முறை தகர்த்தெறியப் பட வேண்டும். அதனிடத்திலே பெரும்பான்மை மக்களுக்கு ஜனநாயகத்தையும் மக்களைச் அடக்கி ஒடுக்கி சுரண்டி வாழும் மிகச் சிறுபான்மையாக உள்ள அதிகாரவர்க்கத்திற்கு சர்வாதிகாரத்தையும் வழங்கும் உண்மையான பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரம் உண்மையான மக்கள் ஜனநாயக அரசு நிலைநிறுத்தப்பட வேண்டும் அனைத்துத் தேசிய இனங்களும் இனக்குழுமங்களும் தங்களது சுயநிர்ணய உரிமைகளை தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

ஆனால் அதுவரை அந்த இறுதி இலக்கை நாம் அடையும் வரை இந்த பாசிச (ஐக்கிய தேசியக் கட்சி) அரசு இந்த முதலாளித்துவப் பாராளுமன்ற முறையைப் பயன்படுத்தி தன்னை மக்களால் தேர்ந்தெடுத்த அரசாகக் காட்டிக் கொண்டு மக்களை மேலும் மேலும் நசுக்கவும் பாசிச அடக்குமுறைகளை மேலும் மேலும் விரிவுபடுத்திக் கொள்ளவும் நாம் அனுமதிக்க முடியாது.

எனவே இன்றைய சூழ்நிலையில் குறைந்த பட்ச ஜனநாயகத்தை முன்நிபந்தனையாக வைத்து தேர்தலில் போட்டியிடும் மாற்று அணிகளுக்கு வாக்களிப்பதன் மூலம் இந்த பாசிச அரசை முதலில் தோற்கடிக்க வேண்டும். இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு வாக்காளனும் இந்த பாசிச அரசுக்கும் அதன் சார்பாளர்களுக்கும் போடும் ஒவ்வொரு வாக்குகளும் உங்களுக்கு நீங்களே மாட்டிக் கொள்ளும் தூக்குக் கயிறைப் போன்றது என்பதை உணரவேண்டும். தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது கூட இந்த அரசுக்கே சாதகமாக அமையும் என்பதை கருத்தில் கொண்டு இந்த நாட்டில் உடனடியாக குறைந்த பட்ச ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் வேண்டி இந்த இரண்டையும் முன் நிபந்தனையாக வைக்கும் மாற்று அணியை வெற்றியடைய வைப்பதன் மூலம் இந்தப் பாசிச அரசை தோற்கடிக்க வேண்டும். அதுவே எமது வேண்டுகோளும் விருப்பமுமாகும்.

"பாசிசமென்பது தொழிலாளி வர்க்கத்தினதும் அனைத்து உழைக்கும் மக்களினதும் மிகக் கொடிய எதிரியாகும்"

-தோழர் ஜோர்ஜ் டிமிட்ரேவ்-

## "அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாக்காளர் பட்டியலின்றி வடக்கு, கிழக்கு தேர்தலா?

## புளொட் அறிக்கை

கொழும்பு, ஜூன் 8

வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை, இந்த நிலையில் தேர்தலை எவ்வாறு இலங்கை அரசு நடத்தும்?

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் இப்படிக் கேள்வி தொடுத்துள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் செயல் அதிபர் திரு. க. உமாமகேஸ்வரனால் வெளியிடப்பட்டிருக்கும் பத்திரிகை அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரை அங்கு ஜனநாயக ஆட்சி முறை இல்லை. சிவில் நிர்வாக அமைப்பு சீர்குலைந்து மிக நீண்ட காலமாகி விட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக லட்சக் கணக்கான [illegible] வீடுகளை விட்டு வெளியேறி இருக்கின்றனர். பலர் இந்தியாவிலும், பிற நாடுகளிலும் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

1983 இல் இருந்து இன்று வரை வடக்கு கிழக்கில் நடந்து வருவது இராணுவ ஆட்சியே என்று கூறலாம்.

ஒரு இராணுவ [illegible] நிர்வாக அமைப்பு முறையில் தேர்தலை நடத்துவது என்பது அரசுக்கு சாதகமான பொம்மை நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையே அன்றி வேறில்லை.

வடக்கு கிழக்கில் அமைதி திரும்ப வேண்டுமானால் சமுகமான சூழ்நிலையில் தேர்தல் நடைபெற வேண்டும்.

இலங்கை அரசு உண்மையில் இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த விரும்பினால் அது உடனடியாக விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை நிறுத்தி நிபந்தனையற்ற முறையில் புலிகளை பேச்சு வார்த்தைக்கு அழைக்க வேண்டும். இந்திய அரசு இலங்கை அரசை இதற்காக நிர்ப்பந்திக்க வேண்டும்.

பிரபாகரனது வீழ்ச்சி தனது வெற்றி என அது நினைக்குமானால் இந்த நாட்டில் அமைதி இன்மையை நிரந்தரமாக வைத்திருக்கவே அது விரும்புகிறது என்றே பொருள் கொள்ள வேண்டும்.

இவ்வாறு உமா மகேஸ்வரன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### வடக்கு-கிழக்கில் அமைதி ஏற்பட

# உமாமகேஸ்வரன் முன்வைக்கும் ஐந்து அம்சத் திட்டம்

(அன்டன் எட்வேர்ட்)

வடக்கு, கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கான வழி வகையாக தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகத் தலைவர் திரு. உமாமகேஸ்வரன் ஐந்து அம்ச திட்டத்தை நேற்று முன் வைத்தார்,

அந்த ஐந்து அம்ச திட்டம் வருமாறு:

* இந்தியா எந்த நிபந்தனையுமில்லாமல் யுத்த நிறுத்தம் செய்து விடுதலை புலிகளுடன்பேச வேண்டும்.

* இராணுவ நிர்வாக அமைப்புகள் அகற்றப்பட்டு இடைக்கால நிர்வாக அமைப்பின் கீழ் சுதந்திரமான சிவில் நிர்வாக அமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

* இடம் பெயர்ந்த அகதி [illegible] பிரதேசத்திலேயே மீளக் குடியேற்றப்படவேண்டும். மீளக் குடியேற்றம் என்ற போர்வையில்திட்டமிட்ட அத்துமீறல் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும்.

* இடைக்கால நிர்வாகத்தின் மேற்பார்வையில் புதிதாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்த வேண்டும்,

* அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட வேண்டிய திருத்தங்கள் உடனடியாகக் கொண்டு வந்து தமிழ்மொழி ஆட்சி மொழியாக்கம் மற்றும் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கான அடிப்படை உரிமைகளும் அரசியலமைப்பில் உத்தரவாதமளிக்கவேண்டும்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

இந்திய இராணுவம் முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலை புலிகளுக்கு எதிராக மேற்கொண்டிருக்கும் கெடுபிடி யுத்தத்தை உடனடியாக நிறுத்தவேண்டும்.

விடுதலை புலி இயக்கத்தவர்கள் மீதான தடையை [illegible] வேண்டும்.

விடுதலை புலி இயக்கத்துடன் எமக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழ் மக்களின் உரிமைக்காக போராடும் ஒரு இயக்கத்தை அழிக்கவும், அடிபணிய வைக்கவும் இந்திய தரப்பினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் கைகட்டி பார்த்து கொண்டிருக்க முடியாது என்பதனை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்;

01.472 2588.

---

Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOTE). BM BOX 7313, LONDON WC1 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்